6.11.2019
அசல் வழக்கு எண்:125-2013
பிவா.சா 1. சீதா சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி குறுக்கு விசாரணை தொடர்ச்சி

பட்டா மற்றும் ஆ பதிவேடு என் மாமியார்பெயரில் உள்ள ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சின்னத்தாய் சொத்துக்களை எனது கணவரும் அவரது சகோதரர்களும் பிரித்துக் கொண்டதற்கான ஆவணம் உள்ளதா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. பிவா.சா,ஆ.1முதல் 4 ஆவணங்கள் தவிர வேறு ஆவணங்கள் என் கைவசம் இல்லை. எனது மகன் பெயர் ராமசந்திர மூர்த்தியாகும் மகள் பெயர் காந்திமதி. நானும் எனது மகன் மற்றும் மகள் ஆகியோர் சேர்ந்து 27.4.2006ம் தேதி ஜெயந்தி குணாளனுக்கு பவர் பத்திரம் எழுதி கொடுத்துள்ளேன் எவ்வளவு இடம் என்று நினைவில்லை. 27.4.2006ம் தேதியிட்ட பவர் பத்திரத்தில் உள்ள விபரம் சரியானது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது நான் படிக்கவில்லை. 27.4.2006 தேதியிட்ட பவர் பத்திரத்தில் உள்ள சொத்து விபரம் எனக்குத் தெரியும். 27.4.2006 தேதியிட்ட பவர் பத்திரத்தில் உள்ள விபரங்களை நான் சொல்லவில்லை. என் மகன் கையெழுத்து போடச் சொன்னதால் நான் கையெழுத்து செய்தேன். வழக்கு பற்றிய விபரம் தெரியும். ஒத்தி எந்த வருடம் வைத்தது என்று எனக்குத் தெரியாது. ஒத்தி பத்திரத்தில் என்ன விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. என் மகள் 10ம் வகுப்புவரை படித்துள்ளான். திருப்பூரில் கம்பெனியில் வேலை பார்க்கிறார் நான் தாக்கல் செய்துள்ள நிருபணவாக்கு மூலத்தை படித்துப் பார்க்கவில்லை. குபேந்திரன் எனக்கு கொளுந்தன் உறவு முறை. எனக்கும் குபேந்திரனுக்கும் விரோதம் எது வும் இல்லை என்றால் சரிதான் ஆனால் நாங்கள் இருவரும் பேசிக்கொள்வதில்லை. குபேந்திரன் அவரது சொத்தை ராமசாமிக்கு கிரையம் செய்துகொடுத்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது எங்களிடம் இருந்து பவர் பத்திரம் எழுதி வாங்கிய ஜெயந்தி குணாளன் ரேவதிக்கு கிரையம் செய்து கொடுத்து விட்டார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. எனது நிருபணவாக்குமூலத்தில் 2,3 பிரதிவாதிகள் 17.4.2006ம் தேதி ஜெயந்தி குணாளன் என்வருககு ச.எண்.42-1ல் கண்ட வடபுரம் 1ஏ 76 செண்டை பவர் பத்திரம் பதிந்து கொடுத்துள்ளேன் என்றும் பவர்பத்திரத்தின் அடிப்படையில் 15.5.2008ம் தேதி ரேவதி என்பவருக்கு கிரையம் பதிந்துகொடுத்துள்ளார் என்று சொல்லியுள்ள விபரங்கள் சரியானது என்றால் சரிதான். குபேந்திரன் சில சொத்துக்களை செல்லம்மாளுக்கு கொடுத்துள்ளார் என்று நான் சொல்லவில்லை. தாவா சொத்துக்கள் என் கணவருக்கும் அவரது சகோதரருக்கும் தான் பாத்தியம் என்பது தான். எனது கணவர் மற்றம் அவரது சகோதரர் பெயரில் தாவா சொத்திற்கு பட்டா இருந்ததா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அனுபவம் செய்து வந்தோம். பட்டா எண் எனக்குத் தெரியாது.

பிவா.சா,ஆ.1 முதல் 4 ஆவணங்கள் 2004க்கு முந்தைய ஆவணங்கள் என்றால் சரிதான். 17.2.2004ம் தேதி வாதியின் தாயார் செல்லம்மாள் குபேந்திரன் என் மகன் பாகபிரிவினை செய்த பின்னர் தான் 27.4.2006ம் தேதியிட்ட பவர்பத்திரத்தின் அடிப்படையில் வா.சா.ஆ.3 ஆவணம் எழுதப்பட்டது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. 17.2.2004 தேதியிட்ட பாகபிரீவனை அடிப்படையில் 27.4.2006 தேதியிட்ட பவர் பத்திரத்தின் அடிப்படையிலும் வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் வடபுரம் 1ஏ76 செண்டு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. ஜெயந்தி குணாளனுக்கு நாங்கள் எழுதிகெபாடுத்த பவர்பத்திரத்தில் சொத்து விபரத்தில் செல்லம்மாள் புஞ்சைக்கு வடக்கு என குறிப்பிட்டுள்ளோம் என்றால் எனக்கு தெரியாது. 27.4.2006 தேதியிட்ட பவர்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தை தவிற பக்கத்தில் சொத்து இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கான பட்டா எங்களது பெயரில் உள்ளது. எனது பெயரிலும் எனது மகள் பெயரிலும் பட்டா இருந்தது. அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு என்ன தெரியும் என்று சாட்சி சொன்னார். 17.2.2004 தேதியிட்ட பாகபிரிவினை பத்திரத்தின் அசல் என் மகனிடம் உள்ளது என்றால் எனக்கு என்ன தெரியும் என்று சாட்சி சொன்னார். இலவச சட்ட உதவி மையத்தில் மனுகொடுத்து எழுதி வாங்கப்பட்டது என்று சொல்லியுள்ள விபரம் பற்றி எனக்குத் தெரியாது. ஜெயந்தி குணாளனுக்கு பவர் எழுதிகொடுத்து அவர் ரேவதிக்கு கிரையம் செய்து கொடுத்த பின்னர் எங்களது பெயரில் தவறாக ஏற்பட்ட சிட்டாவின் அடிப்படையில் தாவா சொத்தில் உரிமை கோருகிறோம் என்றால் சரியல்ல. பிவா.சா,ஆ.1 முதல் 4 வரையிலான ஆவணங்கள் வாதியின் உரிமையை எவ்வித்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பிவா.சா.ஆ1 முதல் 4 ஆவணத்தில் வாதியின் தாயார் செல்லம்மாள் கையெழுத்து செய்யவில்லை என்றால் எனக்குத் தெரியாது. செல்லம்மாளுக்கு பாகத்தில் கிடைத்த சொத்தை அவரது மகனான வாதிக்கு 10.10.2008ம் தேதி தான செட்டில்மெண்ட எழுதிக்கொடு:த்தார் என்றால் எனக்குத் தெரியாது. 27.2.2004 தேதியிட்ட பாகபிரிவினை பத்திரத்தில் வடபுரம் 1ஏ 76 செண்டு எங்களுக்கும் நடுமைய்யம் 1ஏ 12 செண்டு நிலம் வாதியின் தாயார் செல்லம்மாளுக்கும் தென்புரம் 1ஏ 44 செண்டு நிலம் குபேந்திரனுக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. வாதி தன் தாயார் மூலம் கிடைத்த 1ஏ12 செண்டில் தென்புரம் 50 செண்டை 20.10.2010ல் மேலகோட்டையை சேர்நத கூடலிங்கம் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. மீதம் உள்ள 62 செ. நிலம் தாவாத வழக்கு என்றும் தாவா சொத்தில் வாதிக்கு

உள்ள உரிமையை ஆட்சேபனை செய்ய எங்களுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக வழக்கு தா க்கல் செய்வதற்கு 2மாதத்திற்கு முன்பு விசாரணைக்கு காவல்நிலையம் சென்றோம். காவல்நிலைய விசாரணை ஏற்பட்ட காலத்தில் எனக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டதால் எனது மகளான காந்திமதிக்கு ரூ.50000க்கு அடமானம் வைத்தேன். காந்திமதிகது நான் அடமான பத்திரம் எழுதிகொடுக்க உரிமையில்லை என்றும் எழுதிகொடுத்த அடமானபத்திரமான வா.சா.ஆ.7 ஆவணமானது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா,ஆ.8 ஆவணத்தில் தாவா சொத்தை அன்ன ஆகாரத்திற்காக எனக்கு ஒதுக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அன்ன ஆகாதரத்திற்கு என்ற தனியாக எந்த பத்திரமும் எழுதிக் கொடுக்கவில்லை. ச.எண்42-1ல் கண்ட வடபுரம் 1ஏ76 செ. தவிற மீதம் உள்ள சொத்து எனக்கு உரிமையில்லை என்றும் உரிமையில்லாத சொத்தை பொறுத்து எனது மகளுக்கு எழுதிகொடுக்க வா.சா.ஆ.7 அடமானபத்திரம் செல்ல கூடியது இல்லை என்றும் மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் வா.சா.ஆ.7 ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டது என்றும் தாவா சொத்தின் அனுபவத்தை நாங்கள் தடை இடஞ்சல் செய்ய உரிமையில்லை என்றும் தாவா சொத்தை பொறுத்து எழுதிகொடுக்கப்பட்ட அடமானபத்திரம் செல்லத்தக்கதல்ல என கோரியுள்ள பரிகாரம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் மகனை சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் உள்ளேன். தவறாக எதிர்வாதம் செய்கிறோம் என்றால் சரியல்ல.

மறுவிசாகரணை- இல்லை.